# காந்தீயம்

ගාන්ධීයම

Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் – 30 இதழ் 02 ஜனவரி – பெப்ரவரி 2014 விலை ரூபா 10/-


## "காந்திய தத்துவம் என்பது காந்திய வாழ்வியலே"

### காந்தி ஜெயந்தி நிகழ்வில் பேராசிரியர் என். சண்முகலிங்கன்



வரலாறு என்பது ஓடிக்கொண்டிருக்கின்ற நதி. அதனடிப்படையில் காந்தியிடம் இருந்தும் நாம் கற்க வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. இன்றைய அவசர யுகத்தில் காந்தியை நினைத்துப் பார்ப்பதற்கு எமக்கு நேரமில்லாது உள்ளது. இருந்தும் எமது உள்ளார்ந்த சிந்தனையில் காந்தி வருகிறார். கல்வியில் காந்தி வருகிறார். ஆன்மீகத்தில் காந்தி வருகிறார். சமூக வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் காந்தி வருகிறார். காந்திய தத்துவம் என்பது காந்தி வாழ்ந்து காட்டிய வழியேயாகும். என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபர் 2 இல் நடைபெற்ற காந்தியடிகளின் 144 ஆவது ஜெயந்தி தினத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேறகண்டவாறு கூறினார்.

சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் மேலும் உரையாற்றுகையில்,

காந்தியம் என்பது கோழைத்தனமான தத்துவம் அல்ல. காந்திக்கு இயல்பாக வந்த உணர்ச்சி அவரை மக்கள் தலைவராக்கியது. அவரை ஒரு ஆத்ம வீரனாகப் பார்க்கலாம். ஒவ்வொரு மனிதனிடத்தும் மாற்றத்திற்கான வழி உள்ளது. காந்தியின் வாழ்வியல் சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் காந்தீயம் பத்திரிகையின் ஒக்டோபர் இதழை வெளியிட்டு வைத்து உரையாற்றிய சங்கத்தின் தற்காலிக பொதுச் செயலாரும் மூத்த காந்திய வாதியுமான சோ.க. தம்பிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

மகாத்மா காந்தி மறைந்த பின்னர் அவரின் கொள்கைகளைப் பரப்புவதற்கு அகில இலங்கை காந்திசேவா சங்கத்தைத் தொடங்கிய பொழுது அதன் பிரச்சார ஏடாக வசாவிளானில் இருந்து காந்தீயம் வெளிவரத்தொடங்கியது. அப்போது காந்தி வேலாயுதபிள்ளை அதற்குப் பொறுப்பாக இருந்தார்.

அந்நேரத்தில் நான் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மாணவனாக இருந்து சங்கச் செயற்பாடுகளில் ஈடுபடத்தொடங்கினேன். பின்னர் யுத்தம் காரணமாக எமது செயற்பாடுகளில் முடக்க நிலை ஏற்பட்டது. 2002 இல் தற்காலிகமான சமாதானம் நாட்டில் ஏற்பட்ட பொழுது சங்கத்தை மீண்டும் புனரமைக்க எண்ணினோம். அதற்கு ஆ.சபாரத்தினம் ஐயா பெரும் உதவியாக இருந்தார். வேலாயுதபிள்ளை அவர்கள் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் காந்தி நிலையத்தை அமைப்பதற்கு முயற்சி எடுத்த பொழுது அரச அதிபராக இருந்த சிறிகாந்தாவின் உதவியோடு அங்கு 7 ஏக்கர் காணி கிடைத்தது. இன்னும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சங்கம் ஆயத்த நிலையில் உள்ளது என்றார்.

தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந. சிவகரன் "காந்தி காட்டும் சமயம்" எனும் தலைப்பில் உரையாற்றினார். அவர் தனதுரையில் மகாத்மா காந்தி காட்டும் சமயம் ஒழுக்கம் சார்ந்த மனிதாபிமான சமயமாக இருக்கிறது.அவருடைய சமயத்தின் அடிப்படை அறம் தான் என்றார்.

மூதறிஞர் ஆ.சபாரத்தினம், க.செல்வக்குமரன், எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். காந்தி ஜெயந்தி கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

## சிரார்த்த தின நிகழ்வுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மகாத்மா காந்தியடிகளின் 66 வது சிரார்த்த தின நிகழ்வுகள் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

காலை நிகழ்வில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தது அஞ்சலி செலுத்தப்படும்.மாலை நிகழ்வு சங்கத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி "சமகாலக் கல்வியில் காந்திய சிந்தனைகள்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுவார். தொடர்ந்து கடந்த வருடம் சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். காந்தீயம் பத்திரிகை வெளியீடும் இடம்பெறும்.

> "பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள அனைத்து ஆற்றலையும் வெளிக் கொணருவதே கல்வி"
>
> – மகாத்மா காந்தி–

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# மனித நேயக்குரவலர் காந்தி

மனிதத் தன்மை வளங்குன்றி மானிடத்தில்
மிருகக் குணமே தலையெடுக்க லானது
மாபவச் சேற்றில் மண் மூழ் கலானது
புனிதர் காந்தியார் மனம் புண்பட லானது
பொழுதுங்கூட நோன்புதனிற் கழிய லானது
பொறை யுடைமைப் போதனா னாரெதனால்
இனிய நிகழ்வி னொளிக்கீற் றிவ்வையத்தில்
உதயமாக வேண்டுமெனி லரசியற் றொண்டு
இன்றியமையா தெனத்தெளிந்த ஈசத்துவ ஞானி
முனிவு தன்னாற்றலன்று மன்னு மகிம்சையே
மகத்தான சக்தியென்று முழவறைந் தறப்போர்
முனையி லரசை மடக்கலானா ரெதனால்

கொடுமையிலுங் கொடிய அடிமை முறைக்கெதிராய்க்
குரலெழுப்பி நடத்திய ஆர்ப்பாட்டந் தன்னால்
குவலய மனித நேயக் குரவரானார்
நடுநிலை நியாயம் பிறப்புரிமை சாதியென்ற
நெருப்பினா லெரியூட்டப் படுவதைத் தடுத்து
நீதியை நிலைநாட்ட லானா ரெதனால்
உடுக்கை சிறுகதரெனினு மேழையின் வாழ்வு
உயர வேண்டுமென் றுழைக்கலானா ருத்தமர்
ஒவ்வொரு நரன்பின்னு மோடலானா ரெதனால்
தடுமாற்றந் தவிர்த்து திருபொலிய வாழ்ந்து
தன்னைத் தானே முழுதாய்த் தெரிந்துகொண்ட
தன்னறி வாலன்றி வேறுண்டோ தெருளுக

மணிமன்றன்
யாழ்ப்பாணம்.

## “ஜனநாயக முறையில் கருத்து வேறுபாடு காணப்படுவது இயல்பானதே”

### காந்தி சிறுவர் இல்ல செயலாளர் தெரிவிப்பு



அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 20.08.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு தி.இராநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காந்தி நிலைய சிறுவர் இல்லத்தின் செயலாளர் சோ.க.தம்பிப்பிள்ளை இக் கூட்டத்தில் சிறப்புரையாற்று கையில் பின்வருமாறு கூறினார். இக்கூட்டம் மிகவும் முக்கியமான கட்டத்திலே கூட்டப்படுகின்றது. இன்று சங்கத்திற்கு ஒரு முடக்க நிலை ஏற்பட்டுள்ளது. எமக்கிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படலாம். ஜனநாயக முறையில் கருத்து வேற்றுமைகள் காணப்பட வேண்டும். பிரச்சினைகளுக்கு காந்திய வழிமுறையில் தீர்வு காணமுடியும்.

சங்கத்தில் கடந்த 8 மாத காலமாக இந்த இக்கட்டுநிலை இருந்து வந்தது தலைவர் இந்த விடயத்தில் போதியளவு அமைதி காத்தார். தலைவருக்கு கூடிய அதிகாரம் இருக்கின்றது. அவர் இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்திருக் கலாம். அஹிம்சை வழியில் சத்தியத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற் கென்று மீண்டும் காந்தி நிலையம் செயற்படத் தொடங்கி 2 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. அங்கு இப்போது 27 மாணவர்கள் இருக்கிறார்கள். எப்படிப்பட்ட நிலையில் இருந்து வந்து அவர்கள் எம்மோடு இணைந்தார்கள் என்பதை நாம் நோக்க வேண்டும். தலைவர் எமது இல்லப்பணிகளோடு மகாதேவ ஆச்சிரம பணி களையும் முன்னெடுத்து வருகின்றார். இங்குள்ள பல பிரச்சினைகளை அவர் இலகுவாகத் தீர்த்து வைத்தார்.

காந்தி நிலையப் பிள்ளைகளுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டியது நமது கடமை. தங்களுடைய பிறந்த தினம், உறவினரின் சிரார்த்த தினம், போன்ற நிகழ்வுகளின் போது சிறுவர் இல்லத்திற்கு அன்பளிப்புக்கள் தந்து உணவு வழங்கி வரும் அன்பர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். இந்த நல்ல திட்டங்களுக்கு அங்கத்தவர்களும் காந்தி நிலையத்தில் உதவ வேண்டும். வழிகாட்டுவதற்கு இந்தியாவில் இருந்து ஒரு அன்பர் வருகை தர இருக்கின்றார். சங்கத்தினால் காந்திய கற்கை நெறி வகுப்பு நடத்தி சான்றிதழ் வழங்கி இருக்கின்றோம். தமிழ் நாடுகாந்திய சிந்தனைக் கல்லூரி முதல்வர் முனைவர் முத்து லக்குமி இலங்கை வந்த போது மகாதேவ இல்லத்திற்கும் சென்று எம்மையும் சந்தித்தார்கள். காந்தி தத்துவத்தை படிப்பதற்கு வசதியாக சங்கத்திலே காந்தி நூலகத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

காந்தி உண்மையையும் அகிம்சையையும் தேடிச் சென்றார். எமது சமூகம் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்றால் காந்தியம் தான் அதற்கான வழி. அரசியல் வாதிகள் சத்தியம், அஹிம்சைக்கு புறம்பானவர்கள். அவர்களைத் திருத்துவதற்கு காந்தீயம் தான் வழி என்று கூறினார்.

# காந்தீயம்

**காந்தி ஆண்டு 144, ஜனவரி - பெப்ரவரி 2014**


## இலங்கை இனப்பிரச்சினையில் நெல்சன் மண்டேலாவின் சிந்தனைகள்

கறுப்பின மக்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த மாமனிதர் மண்டேலா தனது 95 ஆவது வயதில் அண்மையில் மறைந்தார். அகிம்சைப் போராட்டத்தால் அடக்கு முறைகளை எதிர்த்து தென்னாபிரிக்காவின் தலைவராக 27 வருடகாலச் சிறைவாழ்வுக்குப் பின்னர் தெரிவு செய்யப்பட்டவர் நெல்சன் மண்டேலா. ஐந்து வருடகாலம் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் புதிய தென்னாபிரிக்காவை உருவாக்க முயன்று வந்ததுடன் உலக நலனுக்கும் ஆபிரிக்க நலனுக்கும் அவர் பாடுபட்டு வந்தார். பதவியை விட்டு விலகிய பின்னரும் தனது சேவைகளை தென்னாபிரிக்க அளவிலும் ஆபிரிக்க அளவிலும் உலக அளவிலும் செய்து வந்த உத்தம தலைவராக நெல்சன் மண்டேலா விளங்கினார்.

ஆபிரிக்க பாரம்பரிய கதைகளும் அவற்றில் வரும் உறுதியுடன் நீதிக்காகப் போராடும் கதாபாத்திரங்களும் மண்டேலாவின் முன்மாதிரிகளாயின. தமது 26 ஆவது வயதில் ஆபிரிக்க தேசிய காங்கிரசில் சேர்ந்து தீவிர அரசியலில் ஈடுபட்ட மண்டேலா அக்கட்சியின் புதிய இளைஞர் பிரிவை உருவாக்கக் காரணமாக இருந்தார்.

ஆதிக்க, வன்முறை, சுரண்டல் நாகரிகத்தை உறுதியுடன் எதிர்த்த அவர் மேலை நாகரிகத்தின் நிறைகுறைகளை தெளிவாக்கக் கூடிய தான ஆபிரிக்கர் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதான தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் இளைஞர் அணிக்கான கொள்கை அறிக்கை ஒன்றினைத் தயாரித்தார்.

சிறுவயதிலேயே தலைமைப் பண்புகளுடன் திகழ்ந்த அவரிடம் இலட்சிய நோக்கும், அச்சமின்னையும், தியாக மனநிலையும், பொதுநல உள்ளமும் நிறைந்திருந்தன. போர்ட் பிலேரி கல்லூரியில் அவர் மாணவர் தலைவராக விளங்கி யிருக்கிறார். கல்வியில் தடைகள் வந்தபோதும் தான் கல்வியில் கொண்ட ஆர்வத்தால் ஜோகான்ஸ்பர்க் சென்று தென்னாபிரிக்க பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

மண்டேலாவின் முழுமையான மக்கள் சார்ந்த அணுகு முறையை அவரின் அறிக்கை உணர்த்தும். அந்த அறிக்கையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். "தென்னாபிரிக்க நாடு நான்கு தேசிய இனங்களைக் கொண்டது. அதில் மூன்று பிரிவினர் ( ஐரோப்பியர், இந்தியர், கலப்பினர்) சிறுபான்னையினர் மூன்று இன மக்கள் ( ஆபிரிக்கர், இந்தியர், கலப்பினர்) ஒடுக்கப்பட்டனர். நாம் ஐரோப்பியர்களுக்கு - அவர்களும் மானிடர் என்ற முறையில் எதிரானவர் அன்று. ஆனால் வெள்ளையர் ஆதிக்கம், ஒடுக்கு முறை ஆகியவற்றை முழுமையாக, மாற்றமுடியாத வகையில் எதிர்க்கிறோம்".

மண்டேலாவின் போராட்டம் வெள்ளையருக்கு எதிராக அன்றி இனப்பாகுபாட்டிற்கு எதிராக அகிம்சை வழியில் உறுதியாகத் தொடர்ந்தது. இது தீமையை எதிர்த்து நில்லுங்கள், தீயவர்களை வெறுக்காதீர்கள் என்ற இயேசு மற்றும் காந்தியின் போதனைகளை நினைவுபடுத்துகிறது.

இதனால் தென்னாபிரிக்க தேசியக் காங்கிரஸ் ஒரு வெறும் இனவாதக் கட்சியாக அமையாமல் தென்னாபிரிக்க மக்கள் இயக்கமாக மலர நெல்சன் மண்டேலா பெரிதும் உதவினார்.

மண்டேலாவின் செல்வாக்கு உயரத்தொடங்கியது. அரசாங்கத்தின் அடக்குமுறை மக்களை இன்னும் விழிந்தெழச் செய்தது. சர்வதேச ஆதரவும் வளரத்தொடங்கியது. சில வெள்ளையரும் இனப் பாகுபாட்டை எதிர்க்கலாயினர். அனைத்து இனமக்களும் அதிக அளவில் ஒன்றுபட்டு இன உரிமைக்கு போராட முற்பட்டதால் புதிய தென்னாபிரிக்கா மலர்ந்தது. இந்நிலையில் இன முரண்பாடு உச்சம் அடைந்திருந்த ஈழ பிரச்சினையை நோக்குவோமானால்,

இலங்கை சுதந்திரத்திற்குப் பின் இந்நாட்டில் தீர்க்கப் படாத பிரச்சினையாக தொடர்ந்து வரும் இனப்பிரச்சினையும் அதன் விளைவாக ஏற்பட்ட யுத்தமும் யுத்தத்தின் ஆறாத ரணங்களும் தீர வேண்டுமாயின் நீதியான நிலையான தீர்வுக்கான அடிப்படைகளை அடைவதற்கு நியாயமான பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவைப் பெறுவது சிறுபான்மை இனங்கள் கைக்கொள்ள வேண்டிய உத்தியாகும்.பெரும்பான்மை இனத்தில் இருக்கக் கூடிய முற்போக்கு சக்திகளோடு சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகள் கைகோர்த்து செயற்படவேண்டும். இதுவே நெல்சன் மண்டேலாவின் போராட்டத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.

## மகாத்மா காந்தி

பாரத அன்னையிந்த பரந்த
பாருக்கு பயந்த வித்த
நேரான சிந்தனை மிகுந்த
நீதிமான் நியாய வாதி
பேரான ஆதிபத்தியத்தை
போர்க்கருவி தொடாது அஹிம்சைப்
போர் செய்து வெற்றி யடைந்து
புகழ் பெற்ற மகானை மறப்போமோ.

கலைஞர் பா.பாலச்சந்திரன்
மயிலணி

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

காந்திய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள், காந்தி தொடர்பான செய்திகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள் சம்பந்தமான ஆக்கங்களை வாசகர்கள் எமக்கு அனுப்பி வைக்க முடியும். அவற்றின் பொருத்தப் பாடு மற்றும் தரம் கண்டு அவை காந்தீயத்தில் பிரசுரிக்கப்படும்.

ஆக்கங்களை அனுப்பி வைக்க
வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
"காந்தீயம்" இல 774, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# காந்தி ஜெயந்தி தினப் பதிவுகள் - 2013



காந்தி ஜெயந்தி தின நிகழ்வில் பேராசிரியர் என். சண்முகலிங்கன், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மூதறிஞர் ஆ.சபாரத்தினம், மூத்த காந்திவாதியும் சங்கத்தின் சிரேஷ்ட தலைவருமான சோ.க.தம்பிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.







# பூரணமது விலக்கு

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்
-திருக்குறள்-

குடிகேடு, குடி குடியைக் கெடுக்கும். குடி மதியையும் கெடுக்கும். குடி குடும்பத்தையே சீரழித்து விடும். ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டுமக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ வேண்டுமானால் அந்த நாட்டுக்கு பூரண மதுவிலக்கு அவசியம். பூரண மது விலக்கை நடைமுறைப்படுத்த வழி உண்டு.

மது பாவிப்பவர்களின் நன்மைக்காகவும் மதுவால் பாதிக் கப்படும் குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும் சில ஆலோசனை களைக் கூறுகிறேன். இத்திட்டத்தில் எல்லா மதுவகைகளும் அடங்கும். மது பாவிக்கும் அன்பர்கள் தமக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான அளவைக் குறிப்பிட்ட வேண்டும். தீர விசாரித்து தேவையான அளவுக்கு பேமிற் கொடுக்க வேண்டும். கூடுதலாகக் கொடுத்தால் மீதியை விற்று புதுக் குடிகாரர்களைச் சேர்த்துக் கொள்வார்கள். அளவாகக் கொடுத்தால் விற்க மாட்டார்கள். விற்க மனமும் வராது. தாங்களே பாவித்துக் கொள்வார்கள்.

இதனால் புதுக்குடிக்காரர்கள் பெருக இடமில்லாமல் போகிறது தங்கள் பங்கைக் கொடுத்து புதுக் குடிகாரர்களை உண்டாக்க யாரும் விரும்பமாட்டார்கள். குடித்தவர்கள் இறந்து முடிய குடித்தவர்கள் தொகையும் அற்றுப்போகும். புதுக்குடிகாரர்களைப் பார்க்க முடியாது. அதன் பின் எல்லா மக்களும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் நல்ல மக்களாக வாழ்வார்கள்.

மக்களுக்கு வாழ்ந்து காட்டிய தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் மக்களின் பூரண மதுவிலக்கை கொண்டு வரப் பெரும்பாடுபட்டார்கள்.முடியவில்லை, நல்வாழ்வுக்காகப் பாடுபடும் தொண்டர்களும் ஸ்தாபனங்களும் அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்டு மது அரக்கனை அழித்து விட்டால் நாடு தெய்வலோகமாக மாறும் மக்களும் இன்பமாக வாழ்வார்கள்.

முத்துக்குமார சுவாமி கோயிலடி,
திருக்கோணமலை.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

பொ.கந்தையா
காந்தி ஆசிரியர்

# ஓவியப் பயிற்சியும் திரைப்படக் காட்சியும்

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையம் சிறுவர் இல்லத்தில் 28.07.2013 ஞாயிற்றுக் கிழமை ஓவியப் பயிற்சி வகுப்பும் அதனைத் தொடர்ந்து காந்தி வரலாற்றுத் திரைப்படக் காட்சியும் இடம்பெற்றது. அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாக சபை உறுப்பினர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தியின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வை காந்தி இல்லத்தலைவர் தி.இராசநாயகம் தொடக்க உரையாற்றி ஆரம் பித்து வைத்தார். வளவாளர்களாக இணுவில் இந்துக்கல்லூரி சித்திரபாட ஆசிரியர் செ.ஜெகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் த.சுகந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதுசொமான் ஒரு தாய்

கோடியிருந்தாலும் மாடியிருந்தாலும் உலகில்
கூடி வாழ ஒரு தாய் வேண்டும்,
தேடி வைத்தாலும் தேசமாண்டாலும் உலகில்
தெய்வமாக ஒரு தாய் வேண்டும்,
முடியிருந்தாலும் முழுமை பெற்றாலும் உலகில்
முதன்மையாக தாய் ஆசி வேண்டும்,
முடிமன்னர் கூட பல வெற்றி பெற்றாலும்-உலகில்
முதுசொமான ஒரு தாய் வேண்டும்
வாடி நின்றாலும் வதங்கி நின்றாலும் உலகில்
வருத்தம் நீங்க ஒரு தாய் வேண்டும்
வடிவு என்பதும் வாழ்வு என்பதும் - உலகில்
வளமாக்க ஒரு தாய் வேண்டும்
நாடி நின்று நம்தேசம் என்றாலும் - உலகில்
நனவு கொள்ள ஒரு தாய் வேண்டும்
நாடும் வரம் உமக்கெது என்றாலும் - உலகில்
நனைந்து சுமந்துபெற ஒரு தாய் வேண்டும்

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

# பஹுசர -2013 சுவரொட்டியும் தமிழும்

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தால் "பஹுசர 2013" என்ற தலைப்பில் கலை கலாசார விழா ஒன்று நடத்தப்படவிருந்தது. இவ்விழா பாடசாலை மாணவர்களதும் பல்கலைக்கழக மாணவர்களதும் கலைசார் திறமைகளை இனங்காண்பதற்காகவும் அவர்களின் கலைசார் திறமைகளை மேம்படுத்துவதற்காகவும் 1999 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றது.

இசை, இலக்கியம், நாட்டியம், நாடகம், வரைதல், குறும்பட ஆக்கம். புகைப்படம் எனப் பல்வேறு துறைகளிலும் போட்டி நடத்தப்பட இருந்ததுடன் இத்துறைகளை உள்ளட க்கிய பயிற்சிப்பட்டறைகள் துறைசார் நிபுணர்களால் 2013 மார்கழி மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் பல்கலை வளாகத்தில் நடத்தப்பட இருந்தன.

இவ்விடயமாக மேற்படி மாணவர் சங்கத்தால் சுவரொட்டி ஒன்றும் வெளியிடப்பட்டு அது பாடசாலைகளுக் கும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டது. அச்சுவரொட்டி பாரிய தமிழ் எழுத்துப் பிழைகளோடு காணப்பட்டது. இது பல்கலைக் கழகத்தின் கௌரவத்தை பாதிக்கும் ஒரு விடயமாகும். சுவரொட்டியை தனித்தமிழிலும் வெளியிட்டமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இச் சங்க நிர்வாகிகள் அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்களாக இருப்பினும் பீடத்திலுள்ள தமிழ்பேசும் சகோதரர்களின் உதவியை இவ்விடயத்திலாவது நாடியிருக் கலாம். மேலும் சங்கத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட பொருளாளருமான விரிவுரையாளர் கூட இப்பிரசுர வெளியீடுகளில் கவனம் செலுத்தியிருக்க முடியும். தமிழ்மொழியை இவ்வாறு அலட்சியம் செய்வ தானது தமிழ் பேசும் மக்களை மிகவும் கவலை கொள்ள வைக்கின்ற செயலாகும். தமிழ்மொழிக்கு இந்நாட்டில் ஏற்படும் நிலைக்கு இச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

வீதிப்பெயர்ப்பலகைகள்,அமைச்சு திணைக்களங் களின் பெயர்ப்பலகைகள், அலுவலகங் களினுள் காணப்படும் கிளைகளின் பெயர்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் உள்ள வழிகாட்டிகள், அலுவலகக் கடிதங்கள் போன்ற இன்னோரன்னவற்றின் மொழி பெயர்ப்புகளின் போது தமிழுக்கு ஏற்படும் "கொலைகள்" பல்வேறு தடவைகளில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளன. இதனால் திருத்தங்கள் மாற்றங்கள் ஏற்பட்டாலும் பல இடங்களில் தமிழ்மொழி கவனிக்கப்படுவதாக இலலை. இது விடயத்தில் தமிழ் அதிகாரிகளும் தமிழ் உத்தியோகத்தர்களும் தூங்குவது கவலைக்குரியதாகும். தத்தமது அலுவலகங்களிலாவது இவர்கள் இதனைச்சுட்டிக் காட்டி திருத்தம் செய்யலாம் அல்லவா? நாமே நமது மொழி சாவதை பார்த்துக் கொண்டிருப்பதா?

**காந்தீயம் விசேட நிருபர்.**

# "மில்க்வைற்" பற்றி அண்ணா தொழிலதிபர் S.P.நடராசா

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாய் மொழிக் கிணங்க வந்துதித்தவரே அமரர் மில்கவைற் கனகராசா அவர்கள். அவர் தனது தந்தையினால் சிறு தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனத்தை தனது அயராத முயற்சியால் பெருந் தொழிற்சாலை ஆக்கியவர். இதன் மூலம் பலர் வேலைவாய்ப்பைப் பெற்றனர். தொழிற்சாலையின் பெருவளர்ச்சி காரணமாக பல சமய சமூகப் பணிகளை இவரால் ஆற்ற முடிந்தது. இவர் மிகிழ்வுடன் அறப்பணிகளைச் செய்து வந்தமையால் "சிவதர்ம வள்ளல்" என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கே சிறப்புத்தரும் பனை வளத்தைப் பெருக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் செல்லும் இடமெல்லாம் பனை விதைகளை நடவு செய்து பெருமகிழ்வு கொண்டவர் இவர்.இதன் காரணமாக இவருக்கு "தாலகாவலர்" என்ற சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வாகனங்களில் செல்லமுடியாத இடங்களுக்குக்கூட கால்நடையாகவேனும் சென்று பாடசாலைகள் பலவற்றுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகிராமியச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டியவர். சிறப்பாக வன்னி மாவட்டதத்தில் இவரது சேவை மிகவும் உறுதுணையாக இருந்தது.

பனைமர நடுகை மட்டுமன்றி பயன்தரு மரங்களையும் நாட்டியும் நடுவதற்கு ஊக்கமும் கொடுத்து வந்தார். இவரது இந்தச் சேவைகளில் மகிழ்ந்த அமெரிக்கப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. மிகுந்த ஆன்மீக ஈடுபாடு காரணமாக சமயப் பெரியார்களின் போதனைகள், அறிவுரைகள், திருமுறைகள் ஆகியனவற்றை அச்சேற்றி இலவசமாக வழங்கி வந்தார்.

ஒவ்வொரு மனிதரும் நீடித்த சுகத்துடன் வாழவேண்டும் என்ற எண்ணங்காரணமாக யோகாசனம், தியானம், முதலியவற்றை பயில்வதற்கு வேண்டி ஊக்கத்தையும் கொடுத்து ஒத்தாசை புரிந்து வந்தார்.பனை யிலிருந்து பல பயன்பாடுகளைப் பெற்று யாவரும் வாழவேண்டும் என்பதற்காக ஒரு ஸ்தாபனம் அமைய வேண்டும் என்ற பேரவாவினால் முன்னாள் அமைச்சர் மாண்புகு கொல்வின் ஆர்டி சில்வாவை, பெரியார் க.சி.குலரத்தினம், ஆசிரியர் பரநிருபசிங்கம் ஆகியோருடன் இணைந்து சென்று சந்தித்து "பனை அபிவிருத்திச்சபை" என்ற பெரிய ஸ்தாபனத்தை உருவாக்கக் காரணமாக இருந்தார். இன்று இந்தச்சபை பலஇடங்களிலும் வியாபித்துத் தனது செயற்பாடு களை விஸ்தரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

(தொடர்ச்சி 7ம் பக்கத்தில்..)

# காந்தி ஜெயந்தி தினப் பதிவுகள் - 2013




மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்துக்கு திரு.க.செல்வக்குமரன், யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.















செல்வி.தசோனியா உரையாற்றுவதையும்,காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் மூதறிஞர் ஆ.சப்ரத்தினம், திருமதி. சோ.க.தம்பிப்பிள்ளை அம்மா, மெய்யியல்துறை விரிவுரையாளர் ந. சிவகரன், சங்கத்தலைவர் தி, இராசநாயகம், மூத்த காந்தியவாதி சோ.க.தம்பிப்பிள்ளை, க.செல்வக்குமரன், சங்கப்பொருளாளர் லீலா விநோதன், எஸ். சிறிபதி,எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், சங்கத்தின் யாழ்.கிளைச்செயலாளர் நன்றியுரை வழங்குவதையும் முறையே படங்களில் காணலாம்.

# சமூகத்திற்கு வேண்டிய அகிம்சை

காந்தி அடிகள் பிறந்த தினம் மாபெரும் சிறப்புக்குரிய தினமாகும். காந்தி அவர்கள் கூறிய "சத்தியம்" உலகை ஆளும் மந்திரம். ஒவ்வொரு மனிதர்களிடமும் அடிப்படையில் அகிம்சை காணப்படுகிறது. அதனை மீண்டும் தட்டி எழுப்புதல் காந்தியவாதிகளின் பணியாகவும் அமையும்.

எங்கள் ஒவ்வொருவர் மத்தியிலும் அன்பு, கருணை, சத்தியம்,கொல்லாமை, விட்டுக்கொடுத்தல் காணப்படுகிறது. ஆனால் இன்றைய "சுயநலம்" நிறைந்த சமூகத்தில் இவையாவும் ஆழ்மனதில் உறைந்து கிடக்கும் விடயங்களாகி விட்டன. நாம் எவற்றை பார்க்கிறோமோ, எதனை நினைக்கிறோமோ அதுவாக நாம் ஆகின்றோம்.

இன்றைய சமூகத்தினர் மத்தியில் எது நன்மை, எது தீமை என்று பிரித்தறிந்து செயற்படும் பகுத்தறிவுத் தன்மையின் வலிமை குறைந்து மனம் போன போக்கில் வாழும் நிலமை காணப்படுகிறது. எங்கோ அழிவுப் பாதைக்குள் செல்லும் சமூகத்திற்கு நேர்வழி எதுவென காட்ட வேண்டிய கடப்பாடு பெரியவர்களின் கையிலுள்ளது.

ஒருவனின் "சுதந்திரம்" என்பது மற்றவரின் மூக்கு நுனி வரைதான். நாம் தெரிந்தோ தெரியாமலோ யாரோ ஒருவருக்காவது தீமை புரிகிறோம். வீதிகளில் பயணம் செய்யும் போதும், வேலை செய்யும் இடங்களில், வீடுகளில், எல்லா இடங்களிலும் நாம் எமக்காக செய்யும் செயல்கள் மற்றவர் களை சில வேளைகளில் காயப்படுத்தி இருக்கலாம். நாம் அதனை ஒரு போதும் நினைத்துப் பார்த்ததும் இல்லை.

பால், வயது, சமயம் ,நிறம், சாதி, மொழி, பணம், இனம் போன்ற பல்வேறு காரணங்களினால் சமூகத்தில் புறந்தள்ளப்படும் நிலமைகள் காணப்படுகின்றன. பால்நிலைப் பாரபட்சம் இன்னும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. பெண்களின் கல்வி வீதம் அதிகரித்தாலும் முடிவெடுக்கும் நிலமை இன்னும் பெண்களிற்கு எட்டப்படவில்லை. பெண்களை இயந்திரத் தன்மையுடன் பார்க்கும் மனநிலையும் மாற்றப்படவில்லை. ஒவ்வொரு காரணிகளும் பல்வேறு விடயங்களில் பாரபட்சப்படுத்தப்பட்டு புறந்தள்ளப்படு கின்றன.

"நாங்கள் காணவிரும்பும் மாற்றத்தைக் காண வேண்டுமாயின் முதலில் மாறவேண்டியது நாமே" என காந்தி அடிகள் குறிப்பிட்டார். காந்தியம் கூறும் உண்மைகள் இன்னும் சமூகத்திற்கு முழுமையாக எட்டப்படவில்லை. அகிம்சை என்பதனை "ஒதுங்கி இருத்தல்" எனக்கொள்வது தவறான எண்ணம். தவறுகளைக் கண்டு விலகிநிற்றல் என்பதும் பொருளல்ல. அகிம்சை என்பது அன்பும் கருணையும் நிறைந்தது. பிழைகளைக் கண்டால் தட்டிக் கேட்கவேண்டும். "என்ன நடந்தாலும் நடக்கட்டும் நமக்கென்ன வந்தது" என்று விலகி இருந்தால் அது தவறானது.

அகிம்சை மற்றவர் நிலைக்குள்ளாகி பிரச்சினைகளை அணுகுவது. ஆய்வு ஆராய்ச்சி யாவையும் மனதினால் ஆற்றுவது. பிழை எது சரி எது என நமக்குள்ளே நாம் சிந்திப்பது வாய்மை தவறாது தீர்மானமெடுப்பதுவுமே அகிம்சை.

அகிம்சை உலக மக்களின் தாரக மந்திரமாக அமைந்தால் எந்த ஒரு பிரச்சினையையும் தைரியமாக சந்திக்கும் மனோநிலை உருவாகக்கப்படும். சின்னச்சின்ன விடயங்களில் நாம் நம்மை சீர்படுத்தி வரும்போது பெரிய விடயங்களாகிய சமத்துவம், சகோதரத்துவம், சமூக நல்லிணக்கமும் ஒருமைப் பாடும் வலுப்பெற்று சமூகமும் வலுவூட்டப்பட்ட சமூகமாக மாற்றப்படும் என்பதில் ஐயமில்லை.



துு.தசோனியா
அச்சுவேலி.

---

## "மில்க்வைற்" பற்றி.......

(5ம் பக்கத் தொடர்ச்சி....)

இது மட்டுமன்றி இந்தியா சென்று பனம் பொருளின் உற்பத்திப் பொருட்களை அறியவும் இத் தொழில் மேம்பாடடையவும் நவீன கருவிகளையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தும் முகமாக இந்திய நிபுணர் திரு.சம்பந்தனை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து அவருடைய ஆலோசனைகளைப் பெற்று தொழில் வளம் சிறக்க வழி செய்தார்.

இந்தியாவின் தந்தை காந்தியின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட இவர் கதராடை அணிதல் சுதேசியப் பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றைக் கொண்டு வந்தார்.

இவர் இந்தியா செல்லும் போதெல்லாம் காந்தி கிராமம், காந்தியின் நினைவுச் சின்னம், காந்தியின் சமாதி ஆகியனவற்றைத் தரிசிக்கத் தவறியதில்லை.

இப்படியான யுகபுருசரான இவர் இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் பல தொழிற்சாலைகள் உருவாகி இளைஞர் யுவதிகளுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டவர். அவரது தீர்க்கதரிசனமான சிந்தனை ஓட்டத்தால் பயனடைந்தவர் பலர். அவர்களில் நானும் ஒருவர் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனக்கு தொழில் வழி காட்டலில் குருவாக இருந்து எமது நிறுவனமான அண்ணா தொழிலகத்தின் வளர்சசிக்கு பெருந்துணையாக இருந்தவர் இப் பெரியாரே. இவரின் வழிகாட்டலிலே நாம் வளர்ந்தோம் என்று எண்ணுகின்ற போது எம் மனம் அவரை வணங்கித் துதிக்கின்றது.

இவர் போன்ற ஒரு வழிகாட்டி எனக்குக் கிடைக்கக் காரணமாக இருந்த இறைவனை வணங்குகின்றேன். அவரின் புகழ் யாழ்ப்பாணத்தில் பனைமரம் உள்ள வரை என்றும் வாழும். வாழ்க அவர் தொண்டு, வாழ்க அவர் நாமம்.

# காந்தி ஜெயந்தி கட்டுரைப்போட்டி - 2013 முடிவுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு. இம் மாணவர்களு க்கான பரிசளிப்பு, கடந்த 02.10.2013 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு 774, ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ் மாவட்ட பணிமனையில் நடைபெற்ற காந்தி விழாவில் இடம் பெற்றது.

### ஆரம்ப பிரிவு

1. முதலாம் இடம் – அம்பிகை சண்முகலிங்கன்
   தரம் – 4
   யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம்
2. இரண்டாம் இடம் – கு.மாதங்கி
   தரம் –5, யா/ இணுவில் இந்துக்கல்லூரி
3. மூன்றாம் இடம் – மதுரா அருந்தவம்
   தரம் – 4, யா/இந்து ஆரம்ப பாடசாலை

### கனிஷ்ட பிரிவு

1. முதலாம் இடம் – அஷாரிஹா அசோகன்
   தரம்–7
   யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
2. இரண்டாம் இடம் – ஸ்ரீஸ்கந்தராசா ஜெயவைஷாலி
   தரம்–8
   யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
3. மூன்றாம் இடம் – முஹம்மத் அஸ்மி பாத்திமா ஸகியா
   தரம் –7, கே/முஸ்லிம்மகா வித்தியாலயம்
   கேகாலை

### சிரேஷ்ட பிரிவு

1. முதலாம் இடம் – கமலநாதன் நிரஞ்சன்
   தரம் –10
   யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
   யாழ்ப்பாணம்
2. இரண்டாம் இடம் – சண்முகநாதன் மதுசன்
   தரம் 9
   ஹைலன்ஸ் கல்லூரி, நுவரெலியா
3. மூன்றாம் இடம் – கு.மீரா
   தரம் 11
   யா/ இணுவில் இந்துக்கல்லூரி

### அதிசிரேஷ்ட பிரிவு

1. முதலாம் இடம் – செ. சேந்தன்
   தரம் –12 யா/ இந்துக்கல்லூரி
2. இரண்டாம் இடம் – டர்சிகா சிவம்
   க.பொ.த (உ.த)
   சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
   யாழ்ப்பாணம்.
3. மூன்றாம் இடம் – ரஜனி யோகேஸ்வரன்
   தரம் – 13
   கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி

## காந்தி அண்ணல்

புத்தனின் அன்பும் கண்ணனின் உறுதியும்
சுதந்திர வேட்கையும் சாந்த வடிவமும்
சமாதான போக்கும் சன்மார்க்க சிந்தனையும்
சமத்துவ விருப்பும் சர்வமத சிந்தனையும்
சத்திய விரதமும் சகவாழ்க்கையில் நாட்டமும்
கத்தியும் இரத்தமு மின்றிய யுத்தமொன்றை
அகிலத்தில் நிகழ்த்தி காட்டிய பெருமையும்
உடையவர் எங்கள் காந்தி அண்ணல்
படைப்பலம் கூட அவர் உளத்திடத் திற்கு
பணிந்தது கண்டீர் அவரது கொள்கைகளை
அன்புடன் சேர்ந்து வளர்ப்போம் வாரீர்

*கலைஞர் பா.பாலச்சந்திரன்*
*மயிலணி*

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
2006
-
12
-
31



இறப்பு
2013
-
11
-
14

### புவனேந்திரன் இராஜேஸ்வரன்

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி இல்ல மாணவன் புவனேந்திரன் இராஜேஸ்வரனின் மரணத்தினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கும், இல்ல நிர்வாகத்திற்கும் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கனக்கு இலக்கம் : 1117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## வாசகர்களுக்கு!

இவ் இதழின் இலவச பிரதியொன்றை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா.5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், "காந்தீயம்" இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பத்திரிகை 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
ஆசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A,M.A(Gandhian Thought)